# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.30 /2019

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பாக்கியராஜ் | Father's/Husband's Name : ராமராஜ் | |
| Village | : சித்தார்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தில் நாங்கள் இடைஞ்சல் செய்யததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் இந்தவ ழக்கில் என்ன எதிர்வாதம் செய்கிறேன்என்றால் வாதி சொல்வதுபோல் எந்த சொத்தும் ஸ்தலத்தில் இல்லை என்றும் அவர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிர்வாதம் செய்கிறேன். வாதி 2 சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1வது அயிட்ட சொத்தாக சர்வே எண்.9/1க்கு நடுமையம் 1 ஏக்கர் 4 செண்ட்என்று வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.9/1ன் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 16 செண்டாகும். மேற்படி சொத்தில் 2 ஏக்கர் 18 செண்ட் நிலம் வேலாண்டிநாயக்கர் வகையறாவிடம் இருக்கிறது. மீதம் 1 ஏக்கர் 98 செண்ட் நிலம் பிரதிவாதிகளாகிய எங்கள் 3 பேரின் அனுபவத்தில் இருக்கிறது. சர்வே எண்.9/2ன் மொத்தவிஸ்தீரணம் 2 ஏக்கர் 13 செண்டாகும். சர்வே எண்.9/2ன் மொத்த அனுபவத்திலும் தாதி நாயக்கர் மற்றும் பொம்மிநாயக்கர் வகையறாவினர் இருக்கிறார்கள்.

2) எனது அப்பாவின் தாத்தா பெயர் வீராக்கு நாயக்கர். வீராக்குநாயக்கருக்கு வேலாண்டி நாயக்கர் மற்றும் சுப்பையா நாயக்கர் என்ற இரண்டு பேர் மகன்களாவார். அதில் சுப்பையா நாயக்கர் எனது தாத்தா. சுப்பையா நாயக்கருக்கு ஒரே மகன் தான். அவர் பெயர் ராமராஜ், என்னுடைய அப்பா. சர்வே எண்.9/1, 9/2ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் ஆதியில் வீராக்கு நாயக்கருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வீராக்கு நாயக்கர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது, நான் அவரை பார்த்ததில்லை. வீராக்கு நாயக்கர் அவரது சொத்துக்களை பொறுத்து அவரது

மகன்களுக்கு ஆவணம் எதுவும் எழுதி வைத்திருக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீராக்கு நாயக்கர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான சுப்பையா நாயக்கர் மற்றும் வேலாண்டி நாயக்கருக்கு அந்த சொத்துக்கள் வாரிசுகள் அடிப்படையில் கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி 2 நபர்களும் தற்போது உயிருடன் இல்லை.

3) சுப்பையா நாயக்கருக்கு பாகமாக கிடைத்த சொத்தை அவர் இறப்பிற்கு பிறகு எனது அப்பா ராமராஜ் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பா எவ்வளவு விஸ்தீரணம் நிலத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் 1 ஏக்கர் 98 செண்ட் நிலம். அந்த சொத்து எனது அப்பா அனுபவத்தில் இருந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருக்கிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 ஆண் மக்கள் மற்றும் 1 பெண். என் திருமணத்திற்கு முன்பு வரை எனது அப்பா தான் குடும்பத்தின் கர்த்தாவாக என்னை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருக்கும் வரை குடும்பத்தின் கஷ்ட, நஷ்டங்கள் வரவு, செலவுகள் அனைத்தையும் அவர் தான் பார்த்து வந்தார். அவர் பராமரிப்பில் இருந்த சொத்துக்களை பொறுத்து குடும்ப நலனுக்காக விற்பனை செய்ய அதிகாரம் உள்ளதா என்றால் அதிகாரம் உள்ளது, ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

4) நான் 08.05.1986 ம் தேதி தான் பிறந்தேன். நான் தான் எங்கள் வீட்டின் கடைசி பிள்ளை. எனக்கு எழுத படிக்கத் தெரியும். கடந்த 11.06.1986 ம் தேதி குடும்ப நலனுக்காக எனது அப்பா அவரது பாகச் சொத்துக்களை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா என்னையும் எனது சகோதரர்களையும் மைனர்களாக காட்டி 11.06.1986 ம் தேதியில் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்என்றால் அது மோசடி ஆவணம். வா.சா.ஆ.1 ஆவணம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும். எனது அப்பா எங்களுக்காகவும் சேர்த்து தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டதால் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தை 3 வருடத்திற்குள் ரத்து செய்திருக்க வேண்டும் என்றால் அந்த ஆவணம் பற்றி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரிய வந்தது. நாங்கள் மைனர்களாக இருக்கும்போதே எனது அப்பா வா.சா.ஆ.1 ஆவணத்தை

எழுதி கொடுத்துள்ளதால் அதை நாங்கள் மேஜரானதிலிருந்து 3 வருடத்திற்குள்அந்த ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்றால் வழக்குதாக்கல் செய்த பிறகு தான் அந்த ஆவணம் பற்றி எங்களுக்கு தெரியவந்தது. வாதி 1986 ம்ஆண்டு கிரையம் பெற்றதிலிருந்து இன்று வரை அவர் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6) 1986 முதல் தற்போது வரை வாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றாலும் 2017 ம் ஆண்டு மோசடியாக பாக விஸ்தி பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு, எங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளோம் என்றால் அது மோசடி ஆவணம் இல்லை, நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம். தாவா சொத்துக்களை சித்தார்பட்டியை சேர்ந்த சந்திரா தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் எங்கள் நிலத்தில் நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிகாக 02.03.2026 ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court on 27.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.02.27 11:23:30 +0530

District Munsif,
Aundipatti.